# அட்லஸ்

## வலி நிவாரண மையம்

கோவை



தொலைபேசி 81 2546 2456

www.atlaspaincare.in



வலி என்பது நம் வாழ்வின் ஒரு அங்கம். தசைப் பிடிப்பு, மூட்டுப்பிடிப்பு, சிறு காயங்கள் - இவை அனைத்துமே வலி தரக்கூடியது. இவ்வலிகள் தவிர்க்கமுடியாதது ஆயினும், ஒரு சில வாரங்களில் குணமடையக்கூடியது.

நெடுநாள் வலியென்பது வேறு. அது எளிதில் குணமடையாமலும் சரியான நிவாரணம் இல்லாமலும், நம்மை பலவீனமாக்கி, மனதளவிலும் உடலளவிலும் பல சேதங்களை உருவாக்கும். பொழுதுபோக்குகள், அன்றாடப்பணிகள், உடற்பயிற்சி என எல்லாவற்றிலும் தொய்வை உண்டாக்கும். எதிலும் ஒரு வேதனையை ஏற்படுத்தும். நமக்கு நாமே சுமையாக எத்தனை நாட்களுக்குத்தான் இந்தப் போராட்டம்?

இது போன்ற வேதனையிலிருந்து விடுபட உலகத்தரம் வாய்ந்த அதிநவீன தொழில் நுட்பத்துடன், அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டதும், பாதுகாப்பானதும், உடனடியாகப் பலன் தரக்கூடியதுமான பல வகை மருத்துவச் சிகிச்சை முறைகளை அட்லஸ் வலி நிவாரண மையத்தில் வழங்குகிறோம். ஒவ்வொருவருடைய வலி சார்ந்த பிரச்சனைகளுக்கும், பல துறை சார்ந்த மருத்துவச் சிகிச்சை முறைகளை, தனிப்பட்ட முறையில் வழங்குகிறோம். வலியிலிருந்தும், அதனால் ஏற்படும் வேதனையிலிருந்தும் நீங்கள் விடுபட வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

**தொலைபேசி 81 2546 2456**

**www.atlaspaincare.in**

# அட்லஸ் வலி நிவாரண மையத்தின் சிறப்பு என்ன?

பல சிறப்புகளைக் கூறலாம். நெடுநாளாய் ஆட்டிப்படைக்கும் வலிக்கான காரணத்தை துல்லியமாக கண்டறிவது அதில் ஒன்று. அதன் பின்னர், அந்த நெடுநாள் தொடர்வலிக்கு எந்த சிகிச்சை முறை சிறந்தது என்பதை உங்களுடன் கலந்து தீர்மானித்து, வலியின் வீரியத்தையும் அதன் தாக்கத்தையும் குறைக்கும் சிகிச்சைகளை அளிக்கிறோம். அது தவிர வெளிநாடுகளில் பயின்று, பட்டம் பெற்று, பல ஆண்டுகள் பணியாற்றிய வலி நிவாரண சிறப்பு மருத்துவ நிபுணர்களுடன், பிற துறை சார்ந்த மருத்துவ வல்லுனர்களும் இணைந்து செயல்பட்டு, உங்கள் வலிக்கான சிறந்த தீர்வை கொடுப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

முதுகு வலி, கழுத்து வலி, இடுப்பு வலி, தோள்பட்டை மற்றும் முழங்கை வலி, தலை வலி, முழங்கால் மற்றும் குதிங்கால் வலி என பலவகையான வலிகளுக்கான காரணம் தசைப்பிடிப்பா? சவ்வு

விலகியிருப்பதா? தசைநாரில் ஏற்பட்ட காயமா? நரம்பு அழுத்தமா? மூட்டு தேய்மானமா? அல்லது எலும்பிலிருந்து எழுகிறதா? என்பதை கண்டறிந்தபின் தரப்படும் நவீன சிகிச்சைகள் உங்களுக்கு நீண்டகால வலி நிவாரணத்தை உறுதிப்படுத்துகிறது.



# தவிர்க்க முடியாதது வலி
# தவிர்க்கக்கூடியது வேதனை

## என்ன வகையான சிறப்புச் சிகிச்சைகள்?

### இண்டெர்வென்ஷனல் வலி மருத்துவம்

வலிக்கான மருந்து, மாத்திரை என்றாலே வெறுத்து ஒதுக்கும் மனநிலையில் மக்கள் உள்ளனர். மேலும் அதன் பக்க விளைவுகளான வயிற்றுப்புண், சிறுநீரக பாதிப்பு, மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்றவை மாத்திரைகளின் மீது உள்ள நம்பிக்கையை பெரிதும் குறைத்துவிடுகிறது. மேலைநாடுகளில் உள்ள பிரபலமான இண்டெர்வென்ஷனல் வலி மருத்துவத்தை, தற்போது கோவை அட்லஸ் வலி நிவாரணமையத்தில் அறிமுகப்படுத்தியுள்ளோம். இச்சிறந்த மருத்துவ முறையில் எக்ஸ்ரே, அல்ட்ராசவுண்ட், சி.டி. ஸ்கேன் போன்ற நவீன கருவிகளின் உதவியுடன்

**நுண்ணூசிகளைக் கொண்டு வலிக்கான மூலகாரணம் என்ன என்பது முதலில் கண்டறியப்படும்.**

பின்னர், ரேடியோ அதிர்வலைகளால் வலியை கொண்டு செல்லும் நரம்புகளை மழுங்கச்செய்தல், முதுகுத் தண்டு வடத்தை நுண்ணிய மின் முனைகளால் தூண்டுவித்தல், பம்ப் போன்ற உள்வைப்புக் கருவியின்மூலம் வலி நிவாரணிகளை முதுகுத் தண்டுவடதிரவத்தில் கொண்டு சேர்த்தல் போன்ற அதிநவீன தொழில்நுட்ப முறைகளால் வலியை கட்டுப்படுத்துகின்றோம். இது போன்று நாங்கள் வழங்கும் நூற்றுக்கும் மேற்பட்ட சிகிச்சை முறைகளால் பலரும் பலன் அடைந்திருக்கிறார்கள். வலியில்லா வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

# பலதுறை சார்ந்த மருத்துவமும் நல்வாழ்வும்

வலியை குறைப்பது என்பது ஒரு தொடக்கம்தான். வலியின்றி இயல்பான வாழ்க்கைக்கு முழுமையாக நீங்கள் திரும்பவேண்டும் என்பதே எங்கள் நோக்கம். மருத்துவம் பலன் அளித்தால் கூட, சிறப்பாக, முழுமையாக நீங்கள் செயல்படுவதென்பது உங்கள் உடல் மற்றும் மனவலிமையைப் பொறுத்தது. அதற்காக **அட்லஸ் வலி நிவாரண** மையத்தில் உள்ள உடற்பயிற்சி தருபவர்கள் மற்றும் மனம் சார்ந்த பயிற்சி தருபவர்கள் என பல துறை சார்ந்த மருத்துவக்குழு உங்கள் நிறைகுறைகளைக் கண்டறிந்து நல்வாழ்வுக்கு தங்களை தயார்படுத்தக் காத்திருக்கிறது. உங்களுக்காக அளிக்கப்படும் தனிப்பட்ட சிகிச்சையுடன் உணவுப் பழக்கம், வாழ்க்கை முறை மாற்றம் போன்ற எளிதான வழிமுறைகளால் தொடர் வலியில்லா வாழ்க்கைக்கு மீண்டும் திரும்பலாம்.

## நீண்ட நாள் வலியை நீக்கவும், போக்கவும் முடியுமா?

- முடியும். அதற்கான நவீன சிகிச்சை முறைகள் **அட்லஸ் வலி நிவாரண** மையத்தில் உண்டு.
- ஆலோசனை பெற **அட்லஸ் வலி நிவாரண** மையத்திற்கு வருகை தாருங்கள்
- தவிர்க்க முடியாதது வலி. தவிர்க்கக்கூடியது வேதனை.

## வலியை போக்கலாம் வாழ்க்கையை ரசிக்கலாம்

- 300-க்கும் மேற்பட்ட நெடுநாள் வலிகளுக்கு நவீன சிகிச்சை முறைகள்
- வலி நிவாரண மருத்துவத்தை அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் பயின்று, தேர்ச்சி பெற்று, பல ஆண்டுகள் வெளிநாடுகளில் பணியாற்றிய சிறப்பு மருத்துவ நிபுணர்கள்.
- அறுவை சிகிச்சை இல்லை . ஸ்டெராய்டு ஊசியும் இல்லை.
- வாருங்கள். வலி நிவாரண சிகிச்சைப்பெறுங்கள். மகிழ்ச்சியோடு திரும்புங்கள். மற்றவர்களிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

# அட்லஸ்

## வலி நிவாரண மையம்



**Dr. Senthilkumar Raju**
MBBS, MD, FIPM (CANADA)
DIRECTOR

Dr.Senthilkumar Raju received his basic medical training and did his anaesthesia residency at Annamalai University, India. He completed his chronic pain fellowship from the Toronto Western Hospital, Mount Sinai Hospital, Toronto General Hospital & Sick Kids Hospital at the University of Toronto, Canada.

**இண்டெர்வென்ஷனல் வலி மருத்துவம்**
&
**பலதுறை சார்ந்த வலி மேலாண்மை**


தொலைபேசி **81 2546 2456**

74 (New No 36),Krishnaswamy Nagar, Second Layout,
Ramanathapuram, Coimbatore - 641045.

www.atlaspaincare.in